සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**22 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2014 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2014 டிசெம்பர்
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2014**

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය I, II
தமிழ் மொழியும் இலக்கியமும் I, II
Tamil Language and Literature I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

## தமிழ் மொழியும் இலக்கியமும் I

**கவனிக்க :**
(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் **I** இற்குரிய புள்ளிகள் **40** ஆகும்.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் பிறபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

● தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

**1.** 'அறியாதார் **பொச்சாந்து** தம்மைப் புகழ்ந்துரைப்பர்' - பொச்சாந்து என்பதன் பொருள்
(1) விரும்பி (2) சோர்ந்து (3) மறந்து (4) பொய்யாக

**2.** 'மாரவேள் **சிலை** குனிக்க மயில் குனிக்கும் காலம்' - இங்கு சிலை என்பதன் பொருள்
(1) சிற்பம் (2) கல் (3) புருவம் (4) வில்

**3.** 'மடல் பெரிது தாழை; மகிழ் இனிது **கந்தம்**' - கந்தம் என்பது
(1) கந்தகம் (2) வாசனை (3) காந்தம் (4) இதழ்

**4.** 'உடம்பு **சௌகரியமில்லைத்தான்**' - சௌகரியமில்லை என்பதற்கு நிகரான சொல்
(1) தேகாரோக்கியம் (2) வறுமை (3) அசௌகரியம் (4) சுகம்

**5.** 'வேதாந்தத்தின் **இரகசியங்கள்** எல்லாம் அதில் விளக்கப்பட்டிருக்கின்றன' - இரகசியம் என்பதன் **எதிர்க்கருத்துச்** சொல்
(1) சுவாரசியம் (2) பரகசியம் (3) மறை (4) பரமரகசியம்

● பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

**6.** மாட்டின் இளையது கன்று; பாம்பின் இளையது
(1) குஞ்சு (2) பிள்ளை (3) குட்டி (4) குருளை

**7.** வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை என்பவற்றைக் குறிப்பதற்கு மிகப் பொருத்தமான பொதுச்சொல்
(1) தொலைத்தொடர்பு சாதனங்கள் (2) இலத்திரனியல் ஊடகங்கள்
(3) தொடர்பு சாதனங்கள் (4) வெகுஜன தொடர்பு சாதனங்கள்

**8.** சிறுகதை, நாவல், குறுநாவல் என்பவற்றைக் குறிப்பதற்குப் பயன்படும் பொதுச்சொல்
(1) சிற்றிலக்கியம் (2) பிரபந்தம்
(3) புனைகதையிலக்கியம் (4) ஆக்க இலக்கியம்

**9.** ஒன்று முதல் பத்து, பதினொன்று முதல் இருபது... எனவரும் ஒவ்வோர் பத்து ஆண்டுத் தொகுதியையும் குறிப்பதற்குப் பயன்படும் சொல்
(1) சகாப்தம் (2) சஷ்டியப்தம் (3) சதாப்தம் (4) தசாப்தம்

**10.** வளர்ச்சி, விருத்தி, கூர்ப்பு என்பவற்றுக்கு நிகரான சொல்
(1) பரிமாணம் (2) பரிணாமம் (3) ஆரோகணம் (4) ஆரோக்கியம்

[பக். 2 ஐப் பார்க்க

**11.** 'அரச துறையில் ஒரு கிளார்க் வேலையாவது கிடைத்தால் வாழ்க்கையை நிம்மதியாக ஓட்டிவிடலாம்' கிளார்க் என்ற சொல்லுக்கு உரியதாக தமிழில் **வழங்கப்பெறாத** சொல்
(1) குமாஸ்தா (2) இலிகிதர் (3) பதிவாளர் (4) எழுதுவினைஞர்

**12.** 'மிதமிஞ்சிய ஆசை ஆபத்தானது' - மிதமிஞ்சிய என்பதற்கு நிகரான சொல்
(1) முறைகேடான (2) அநீதியான (3) அளவுக்கதிகமான (4) கணிசமான

**13.** வஞ்சகா! பாதகா! போ! தைரியமிருந்தால் வீரசுவர்க்கத்துக்குப் போய்க் கருணாகரனோடு போர் செய்! இங்கு இடம்பெற்றுள்ள நிறுத்தக்குறிக்கு மிகப் பொருத்தமான பெயர்
(1) தொடரிசைக்குறி (2) உணர்ச்சிக்குறி (3) வியப்பிசைக்குறி (4) ஆச்சரியக்குறி

**14.** 'எதிரிகளை நிர்மூலமாக்கினான்' - நிர்மூலமாக்குதல் என்பதன் மூலம் உணர்த்தப்படுவது
(1) வறியவராக்குதல் (2) துரத்துதல் (3) முற்றாக அழித்தல் (4) பலமற்றவராக்குதல்

**15.** பழித்துரைத்தல் என்னும் பொருள்தரும் மரபுத்தொடர்
(1) நாக்குப் புரளுதல் (2) நாக்கு நீட்டுதல் (3) நாக்கு வளைத்தல் (4) நாக்கு அசைத்தல்

**16.** வீணாகிப் போதலைக் குறிப்பதற்குப் **பொருத்தமற்ற** உவமைத்தொடர்
(1) அங்கணத்துள் உக்க அமிழ்தம் போல (2) காட்டில் எறித்த நிலவு போல
(3) மீகாமன் இல்லா மரக்கலம் போல (4) விழலுக்கு இறைத்த நீர் போல

**17.** 'வேலைவெட்டி இல்லாமல் திரிகிறான்' - இங்கு இடம்பெற்ற வெட்டி என்ற சொல் இதே பொருளில் கையாளப்பெற்ற பிறிதொரு தொடர்
(1) விறகுவெட்டி (2) பாக்குவெட்டி (3) வெட்டிப்பேச்சு (4) வெட்டி விழுத்து

**18.** ஒருவனுக்கு ஒரு பொருள்மீது உள்ள உரிமையைத் தெரிவிப்பதாக எழுத்துருவில் அமைந்த உறுதிப்பத்திரம்
(1) கல்வெட்டு (2) சிலாசாசனம் (3) சான்றிதழ் (4) ஆவணம்

**19.** பெரியவர்கள் எந்த நிலையிலும் சிறியவர்களைவிடத் தாழ்ந்து விடுவதில்லை என்பதை விளக்கும் பழமொழி
(1) எறும்பும் தன் கையால் எண்சாண்
(2) யானை படுத்தாலும் குதிரை மட்டம்
(3) உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா ?
(4) வெள்ளைக்கில்லை கள்ளச் சிந்தை

**20.** ஒத்த பொருள் உள்ள இரு சொற்களால் அமைந்த இணைமொழி
(1) ஈடும் எடுப்பும் (2) கண்ணீரும் கம்பலையும்
(3) ஒளிப்பு மறைப்பு (4) இல்லாதது பொல்லாதது

**21.** 'படி' என்பது பெயராக அமைந்த தொடர்
(1) கறைபடிந்த வாழ்க்கை (2) படியளந்த எஜமான்
(3) படிந்த பனித்துளி (4) படிக்காத பையன்

**22.** பெயர்ச்சொல்லும் பெயர்ச்சொல்லும் சேர்ந்தமைந்த கூட்டுப்பெயர்
(1) ஏவுகணை (2) பறிமுதல் (3) தொலைக்காட்சி (4) சுடுகாடு

**23.** செயப்பாட்டுவினை வடிவத்துக்கு **மாற்றமுடியாத** வாக்கியம்
(1) மாலி சிறந்த கார்ட்டூன்களை வரைந்தார்.
(2) அந்தக் கார்ட்டூன் என்னைக் கவர்ந்தது.
(3) ஜவகர்லால் நேருவையும் கார்ட்டூன் வித்தை விரட்டியது.
(4) கார்ட்டூன் ஓவியர்கள் பெரும் செல்வந்தர்களாய் இருக்கிறார்கள்.

**24.** கெடுதல், தோன்றல் விகாரங்கள் இடம்பெற்றுப் புணர்ந்த சொல்
(1) பலாவிலை (2) பழச்சாறு (3) பழமரம் (4) பனையோலை

/பக். 3 ஐப் பார்க்க

The National e-learning Portal for The General Education

**25.** 'படித்தவர்களும் தவறு விடுகிறார்கள்' - இங்கு படித்தவர்கள் என்பது
(1) தொழிற்பெயர்
(2) காரணப்பெயர்
(3) வினையாலணையும் பெயர்
(4) ஆக்கப்பெயர்

**26.** ககர மெய்(க்) வேறுபட்டு ஒலிக்கும் சொல்
(1) கண்ணாடி (2) காடு (3) அகம் (4) பக்கம்

**27.** (அ) அமைச்சர் இன்று கூட்டத்துக்கு வரக்கூடும்.
(ஆ) கள்ளன் பிடிபட்டான்.
(இ) புலவர் காவியம் பாடினார்.
(ஈ) தொழிலாளி இன்று வேலைக்கு வரவில்லை.
(உ) சிறுவன் அடம்பிடித்தான்.
இவற்றுள் ஆண்பாற் பெயர்களை எழுவாயாகக் கொண்ட வாக்கியங்கள் எவை ?
(1) அ, ஆ, இ (2) அ, ஆ, உ (3) ஆ, இ (4) ஆ, உ

**28.** நான் அவரை எதிர்த்துப் பேசவில்லை.
அவரது பேச்சில் நியாயம் இருந்தது.
மேற்படி இரு வாக்கியங்களையும் இதே ஒழுங்கில் தர்க்கரீதியாக இணைப்பதற்கு மிகப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்
(1) ஆகையால் (2) ஏனெனில் (3) ஆனாலும் (4) எனவே

**29.** 'ஊரவர்' என்ற சொல், உடைமைப்பொருள் வேற்றுமை ஏற்று வந்த வாக்கியம்
(1) அவன் ஊரவரை வெறுத்தான்.
(2) அவன் ஊரவரால் பழித்துரைக்கப்பட்டான்.
(3) அவன் ஊரவர் விருப்பத்துக்கு உரியவனானான்.
(4) ஊரவர் அவனது வெறுப்புக்கு உரியவராயினர்.

**30.** எழுத்துப்பிழை உள்ள சொல் இடம்பெற்ற வாக்கியம்
(1) சமூகத்தில் உள்ள குறைபாடுகள் களையப்படல் வேண்டும்.
(2) கூட்டத்துக்கு தவறாது சமுகமளிக்க வேண்டும்.
(3) கணிசமான உறுப்பினர்கள், கூட்டத்துக்குச் சமூகமளிக்கவில்லை.
(4) சமூகத்தின் முக்கிய புள்ளிகள் கூட்டத்துக்குச் சமுகமளித்திருந்தனர்.

e-thaksalawa The National e-Learning Portal for the General Education

- பந்திகளை வாசித்து, அவற்றின் அடிப்படையில் வினாக்களுக்கு விடை தருக.

**31.** மாறாத எதுவும் வளர்ச்சியடைவதில்லை. மொழி இதற்கு விதிவிலக்கு அல்ல. வாழும் மொழிகள் எல்லாம் இடையறாது மாற்றத்துக்கு உள்ளாகின்றன. மாற்றமும் வளர்ச்சியும் ஒரு நிகழ்ச்சியின் இரு அம்சங்களாகும். மொழி ஒரு சமூக சாதனம் என்ற வகையில் சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களும் வளர்ச்சிகளுமே மொழிமாற்றத்தையும் வளர்ச்சியையும் இறுதியாகத் தீர்மானிக்கின்றன.
- மேற்படி பந்தியின் ஆசிரியருக்கு உடன்பாடில்லாத கருத்து
(1) மொழியில் ஏற்படும் மாற்றங்கள் அதன் வளர்ச்சியின் அடையாளம்.
(2) சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களாலேயே மொழியில் மாற்றம் ஏற்படுகின்றது.
(3) மொழி வளர்ச்சி காரணமாகவே சமூகத்தில் மாற்றங்கள் ஏற்படுகின்றன.
(4) மொழி ஒரு சமூக சாதனம்.

**32.** மாற்றங்கள் எல்லாக் காலப்பகுதியிலும் நிகழ்ந்துள்ளனவாயினும், வரலாற்றைத் திரும்பிப் பார்க்குமிடத்து மாறுதல்களின் வேகம் எமது காலத்தில் மிகுந்து காணப்படுவதை அவதானிக்கலாம். மாறுதல் குறித்த நோக்குக்கூடப் பெரிதும் மாறியுள்ளமையினைக் காணவியலும். பாரம்பரிய வழிமுறைகளை அப்படியே கடைப்பிடிக்கும் தன்மையும் புதியனவற்றைக் கைக்கொள்வதில் துணிச்சற் குறைவும் ஆங்காங்கு தென்படினும், புதிய மாறுதல்கள் பெரும்பாலும் வரவேற்கப்படுகின்றன. வரவேற்கப்படாவிட்டாலும் மாறுதல்களின் தாக்கம் ஏற்படவே செய்கிறது.
- மேற்படி பந்தி எதனை வலியுறுத்த விழைகிறது ?
(1) மாற்றங்கள் நிகழ்ந்தாலும் புதியனவற்றைக் கைக்கொள்வதில் துணிச்சற்குறைவு ஆங்காங்கு தென்படுகிறது.
(2) நமது காலத்தில் விரும்பியோ விரும்பாமலோ மாறுதல்களும் அவற்றின் தாக்கமும் பெருமளவில் ஏற்படுகின்றன.
(3) மாறுதல்கள் வரவேற்கப்படாதவிடத்தும் அவற்றின் தாக்கம் ஏற்படவே செய்கிறது.
(4) நமது காலத்தில் மாறுதல் பற்றிய கோட்பாடுகூட பெரிதும் மாறிவிட்டது.

/பக். 4 ஐப் பார்க்க

● வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவுசெய்க.

**33.** போட்டிக்காக கவிஞர்கள் அனுப்பியிருந்த அனைத்துக் கவிதைகளும் நடுவர்களால் ஒவ்வொன்றாக நன்கு

(1) படித்துப் பார்க்கப்பட்டது. (2) படித்துப் பார்த்தார்கள்.
(3) படித்துப் பார்க்கப்பட்டன. (4) படித்துப் பார்க்கப்படுகிறது.

**34.** அந்த விபத்து நடந்தமைக்கு வீதியின் சீர்கேடும்

(1) பிரதான காரணமாய் அமைந்தது. (2) ஒரு காரணமாய் அமைந்தது.
(3) பிரதான காரணம். (4) முதன்மைக் காரணமாகிவிட்டது.

● சரியான வாக்கியத்தைத் தெரிவுசெய்க.

**35.** பாடசாலையின் அபிவிருத்தியை முன்னிட்டு கூட்டங்கள் கூட்டப்படுகின்றன; திட்டங்கள் முன்வைக்கப்படுகின்றன; நிதி சேகரிக்கப்படுகின்றது; வேலைகள் நடைபெறுகின்றன; …………

- புள்ளிக் கோடிட்ட இடத்தில் வருவதற்குப் **பொருத்தம் அற்ற** வாக்கியம்

(1) அவற்றால் நல்ல அபிவிருத்தி ஏற்படுகிறது.
(2) ஆனால் அபிவிருத்தியைத்தான் காணவில்லை.
(3) அவற்றால் ஏற்படவேண்டிய அபிவிருத்தியைத்தான் காணவில்லை.
(4) அதனால் வரவேண்டிய அபிவிருத்தி இல்லை.

**36.** "அந்தப் போராட்டத்தில் எங்களோடு பல்கலைக்கழகத்தில் படித்த பாலச்சந்திரனும் இணைந்துகொண்டார்."

- பல்கலைக்கழகத்தில் படிக்காத ஒருவரின் மேற்படி கூற்றில் உள்ள மயக்கத்தை நீக்கிச் செவ்வையாக எழுதப்பட்ட வாக்கியம்

(1) எங்களோடு பல்கலைக்கழகத்தில் படித்த பாலச்சந்திரனும் அந்தப் போராட்டத்தில் இணைந்துகொண்டார்.
(2) பல்கலைக்கழகத்தில் எங்களோடு படித்த பாலச்சந்திரனும் அந்தப் போராட்டத்தில் இணைந்துகொண்டார்.
(3) பல்கலைக்கழகத்தில் படித்த பாலச்சந்திரனும் அந்தப் போராட்டத்தில் எங்களோடு இணைந்துகொண்டார்.
(4) அந்தப் போராட்டத்தில் பல்கலைக்கழகத்தில் எங்களோடு படித்த பாலச்சந்திரனும் இணைந்துக்கொண்டார்.

● புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

**37.** இந்தமுறை தேர்தலில் அவர் எந்தவொரு கட்சி சார்பாகவும் அன்றி …………………… போட்டியிடுகின்றார்.

(1) முதன்மை வேட்பாளராகவே (2) விருப்பு வேட்பாளராகவே
(3) தேசியப் பட்டியல் வேட்பாளராகவே (4) சுயேச்சை வேட்பாளராகவே

**38.** நாட்டில் அச்சிட்டு வெளியிடப்பெற்ற நூல்கள், பத்திரிகைகள், துண்டுப்பிரசுரங்கள் முதலானவற்றின் பிரதிகள் தேசிய …………………… பேணப்பட்டுவருகின்றன.

(1) சுவடிகள் கூடத்தில் (2) கலைக்கூடத்தில்
(3) நூதனசாலையில் (4) நூலகத்தில்

**39.** …………………… மிகவும் பொறுமையோடும் புரிந்துணர்வோடும் பராமரிக்க வேண்டும்.

(1) சித்தசுவாதீனம் உள்ளவர்களை (2) சித்தசுவாதீனக்காரர்களை
(3) சித்தசுவாதீனம் அற்றவர்களை (4) சித்தந் தெளிந்தவர்களை

● கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவுசெய்க.

**40.** (அ) ஆகவே தொல்காப்பியர் காலத்தில் வடக்கே வேங்கடமலை வரையில் தமிழ் வழங்கியது எனக் கொள்ளலாம்.
(ஆ) இந்த அடிப்படையிலேயே தொல்காப்பியத்தின் பாயிரச் செய்யுள் தமிழ் மொழி வழங்கும் எல்லையை 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடை' என்று கூறுகிறது.
(இ) அரசியல் எல்லைக்கும் மொழி வழங்கும் எல்லைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.
(ஈ) மாறாக, அரசியல் எல்லைகளைப் பொருட்படுத்தமாட்டார்கள்.
(உ) அதனால், இலக்கண ஆசிரியர்கள் தாம் எந்த மொழிக்கு இலக்கணம் எழுதுகிறார்களோ அந்த மொழி வழங்குகின்ற எல்லையையே கருத்திற் கொள்வார்கள்.

(1) இ, ஆ, ஈ, உ, அ (2) இ, ஆ, உ, ஈ, அ
(3) இ, உ, ஈ, ஆ, அ (4) உ, ஈ, இ, ஆ, அ

* *

[பக். 5 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**22 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2014 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2014 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2014

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය I, II
தமிழ் மொழியும் இலக்கியமும் I, II
Tamil Language and Literature I, II

## தமிழ் மொழியும் இலக்கியமும் II

※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.
※ இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**1.** சுருக்கமான விடை எழுதுக.

(i) பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.
'நாணுக்குநெஞ்சுடையநல்வேந்தர்'

(ii) பத்து இலட்சம் ரூபா பெறுமதியான குப்பைகளை அகற்றும் ஓர் இயந்திரம் வாங்கப்பட்டது. இந்த வாக்கியத்தில் காணப்படும் மயக்கத்தை இனங்கண்டு, வாக்கியத்தைத் திருத்தி எழுதுக.

(iii) பின்வரும் வாக்கியத்தின் எழுவாய் பயனிலையைக் குறிப்பிடுக.
'பியத்துக் கொண்டு போயிற்று காற்று கதைபரப்ப'

(iv) பின்வரும் பேச்சுவழக்குத் தொடரை எழுத்து வழக்குத் தொடராக மாற்றுக.
"அங்கதான் ஒன்ட கெட்டித்தனமிரிக்கு"

(v) சமயத்துறவிகளை விளிக்கும்போது கையாளப்படும் தொடர்:
அதிமேதகு, வணக்கத்துக்குரிய, கௌரவ, அன்புடைய

(vi) சுருக்கம் ஒன்றை எழுதும்போது தவிர்க்க வேண்டியது
மையக்கருத்தை வெளிப்படுத்துதல், உதாரணந்தருதல், தொடர்புபடுத்துதல், தொகை மொழிகள் பயன்படுத்துதல்

(vii) 'சூறாவளியால் அளப்பெரிய சேதங்கள் ஏற்பட்டன' - இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள தவறை இனங்கண்டு வாக்கியத்தைத் திருத்தி எழுதுக.

(viii) "நண்பகலின்
வெய்யில் அஞ்சி
மரத்தடியில் ஒதுங்கும்
பெருநிழல்"
- இதில் இடம்பெற்றுள்ள அணியை இனங்கண்டு விளக்குக.

(ix) "பின்னை என்னார்கள் ஐயம்
பெண்கள் தன் இடையே ஐயம்"
- இங்கு ஐயம் என்ற சொல் குறிக்கும் இருவேறு பொருள்கள் யாவை ?

(x) சீதா கடைக்குச் சென்றாள்.
சீதா கடையில் பொருள்களை வாங்கினாள்.
சீதா வீட்டுக்குத் திரும்பினாள்.
மேலேயுள்ள வாக்கியங்களை இணைத்து ஒரு வாக்கியமாக எழுதுக. *(20 புள்ளிகள்)*

[பக். 6 ஐப் பார்க்க

**2.** பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவுசெய்து, ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

(i) போட்டி மன்பான்மையும் ஆசைகளும் சுயநலமும் மனிதரிடையே சண்டை சச்சரவுகளை ஏற்படுத்துகின்றன. இன்று உலக நாடுகளிடையே மதம், இனம், மொழி, அதிகாரம் எனப் பல வகைகளால் போட்டிகளும் மோதல்களும் நிகழ்கின்றன. இதனால் விலைமதிப்பற்ற உயிர்கள் அழிகின்றன. சகலரும் துன்பம் அனுபவிக்கின்றனர். ஆகவே இன்று நமக்குத் தேவை அமைதியான, போரில்லாத வாழ்க்கை; அகிம்சை வழியான வாழ்க்கை. இவ்வாறான கருத்துகள் அமையுமாறு ஒரு **கட்டுரை.**

(ii) தொழில்நுட்ப வளர்ச்சியால் இன்று மாணவரிடையே செல்லிடப்பேசி, கணினி முதலான இலத்திரனியல் கருவிகளின் பாவனை அதிகரித்துள்ளது. குறுஞ்செய்தி, மின்னஞ்சல், முகநூல், இணையம் முதலியவற்றினூடாக அவர்கள் விரைவாகத் தகவல்களைப் பெறுகின்றனர்; பரப்புகின்றனர்; அறிவு பெருகுகிறது. எனினும் இவற்றால் படிப்பில் கவனமின்மை, துஷ்பிரயோகங்கள் என்பவற்றிற்கும் வழி ஏற்பட்டு விடுகின்றது. இவ்வாறாக இலத்திரனியல் ஊடகங்களால் மாணவ சமூகத்துக்கு ஏற்படும் நன்மை தீமை பற்றி இருவருக்கிடையே நடைபெறும் **உரையாடல்.**

(iii) காட்டுவளம் என்பது ஒரு நாட்டின் இயற்கைச் செல்வமாகும். காடுகளில் வளர்ந்த மரங்கள் மனிதனின் பல்வேறு தேவைகளுக்கும் உதவுகின்றன. காலைநிலையைச் சமப்படுத்துவதிலும் அது உதவுகின்றது. பல்வகை உயிர்களது புகலிடமாக அது விளங்குகின்றது. இயற்கைச் சமநிலையைப் பேணுவதிலும் அதற்குப் பங்குண்டு. ஆயின் இன்று மனிதனது பொறுப்பற்ற நடவடிக்கைகள் காரணமாகக் காடுகள் விரைவாக அழிந்து வருகின்றன. எனவே காட்டுவளத்தைப் பாதுகாப்பது எமது கடமை எனும் தொனிப்பொருளில் அமைந்த ஒரு **மேடைப் பேச்சு.**

(iv) கமலன் படிப்பிலும் பிற செயற்பாடுகளிலும் கெட்டிக்காரன்தான். எனினும் வீட்டில் அடங்காப்பிள்ளையாகவே நடந்து கொண்டான். தந்தையை மதிப்பதில்லை. சுற்றத்துடனும் அப்படியே. படிப்புத் திறமை காரணமாக நல்ல தொழிலும் அதன்மூலம் நல்ல குடும்ப வாழ்கையும் கிடைத்தன. குழந்தைகள் பிறந்தன. இப்போது அவனது மகன் கமலன் போலவே அடங்காப்பிள்ளையாக நடக்கத் தொடங்கினான். தந்தையின் நிலை இப்போது கமலனுக்கு விளங்கியது. தான்விட்ட தவறுகளை உணரத் தொடங்கினான்...... இப்படிப்பினையை அடிப்படையாகக் கொண்டு ஒரு **சிறுகதை.**

*(25* புள்ளிகள்*)*

**3.** கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் **சுருக்கத்தை** 40 - 45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

எந்த ஒரு கலையோ இலக்கியமோ உண்மையாகச் செழித்து வளர வேண்டுமாயின், அது, பேரியக்கமொன்றின் அம்சமாக இருத்தல் அவசியம். நாட்டுப் பாடல் வளர்ச்சியும் இவ்விதிக்கு விலக்கன்று. உழைக்கும் மக்களின் இலக்கியம் நாட்டுப் பாடல்களாம். பல்வேறு காலமாகச் சமூகத்திலே நசுக்கப்பட்டு வந்துள்ள அவர்களது ஆவேசமும், உரிமைக் குரலும் நாட்டுப் பாடல்களில் ஆங்காங்கு ஒலிப்பதுண்டு. இன்ப துன்பங்களைச் சித்திரிக்கும் பாடல்களின் அடிநாதமாக அவர்களது கண்ணோட்டம் அமைந்துள்ளது. அது நம்பிக்கையோடு எதிர்காலத்தை நோக்கும் கண்ணோட்டமாகும். அந்தக் கண்ணோட்டத்தை ஆதாரமாகக்கொண்டு எமது காலத்துச் சமூக இயக்கங்களில் நாட்டுப்பாடல் முதலியவற்றைக் கலந்தால் நிச்சயம் அவை புதிய வாழ்வு பெறும். ஆனால் அவ்வாறு செய்தால் அதன் 'தூய்மை' கெட்டுவிடும் எனச் சிலர் பிரலாபிப்பர்.

எனினும் இன்று இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளிலே Folk Song - நாட்டுப்பாடல் இயக்கம் மிகவும் செழித்து வளரக் காண்கிறோம். முன்னெப்பொழுதுமில்லாத அளவு பாடல்கள் இயற்றப்படுகின்றன. 'கச்சேரி'களிலும் அரங்குகளிலும் கலைஞர்கள் புதிய புதிய நாட்டுப் பாடல்களைப் பாடி பல்லாயிரக்கணக்கான மக்களைப் பரவசத்திலாழ்த்தி வருகின்றனர். அதன் இரகசியம் என்ன ? வேறொன்றுமில்லை. அணு ஆயுத எதிர்ப்பு, சமாதானக் கோரிக்கை, அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு, பலவிதமான உரிமைப் போராட்டம் முதலிய இயக்கங்களில் ஈடுபட்டுழைக்கும் ஆயிரக்கணக்கான இளைஞரும், பிறரும் தமக்குப் பொழுதுபோக்காகவும், தமது கருத்துகளைப் பிறருக்கு எடுத்துரைக்கும் முகமாகவும் நாடோடிப் பாடல் மெட்டுகளில் புதிய உள்ளடக்கத்தைப் பெய்கின்றனர். அதிலே ஆத்ம திருப்தியடைகின்றனர்.

பழைய மெட்டுக்கள் ஏற்கனவே மக்கள் நெஞ்சில் நிலைத்திருப்பனவாகையால், விரைவில் புதிய பாடல்கள் யாவராலும் பாடப் பெறுகின்றன. பழைய சாடியில் புதிய மது வார்க்கப்படுகின்றது. இரண்டும் சிறப்புப் பெறுகின்றன. இதிலொன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

*(10* புள்ளிகள்*)*

[பக். 7 ஐப் பார்க்க

**4.** பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பூரண வாக்கியங்களில் விடை எழுதுக.

வெண்ணை தன் வீட்டில் இருக்க நெய் - பிறர்
வீட்டில் இரக்கின்ற பேரென - நிறை
பண்ணை நம் நாட்டில் இருக்கவும் - துதி
பாடிப் பறந்து உணவு ஏற்கிறோம்.

நெல் அரிசிக்கு அழுது ஏங்குவோம் - நிலம்
நீண்டு கிடப்பது காண்கிலோம் - இனும்
புல்லடிமைத் தொழில் பேணுவோம் - எனில்
பூமி திருத்தி உண்பார் எவர் ?

கோழிகள் மேய்க்கின்ற வேலையும் - பெறக்
கோறணமேந்தினுக்கு ஓடுவோம் - உயர்
மேழி பிடித்து உழும் வேலைகள் - செய
வேம்பெனப் பின்னடைகின்றது ஏன் ?

நாட்டுத் தொழில்களைப் பேணிடும் - குணம்
நம்மவர்க்கு இல்லை இந் நாளிலே - பணங்
கூட்டிக் குவிக்கிற வேலைகள் - பெறக்
குட்டிக் கரணமும் போடுவோம்.

(i) இந்தக் கவிதை வலியுறுத்தும் பிரதான விடயம் யாது ?

(ii) இக் கவிதையில் இடம்பெற்றுள்ள பழமொழி ஒன்றினை இனங்கண்டு எழுதுக.

(iii) இக் கவிதையில் இடம்பெற்றுள்ள உவமைகளை இனங்கண்டு விளக்குக.

(iv) மேழி, துதி எனும் சொற்களின் பொருளைத் தருக.

(v) கோழிகள் மேய்கின்ற வேலையும் - பெறக்
கோறணமேந்தினுக்கு ஓடுவோம்
- இக்கூற்று மூலம் உணர்த்தப்படுவது யாது ?

*(10 புள்ளிகள்)*

**5.** நீர் உம்மை ஒரு சமூகநல உத்தியோகத்தர் எனக் கருதிக் கொண்டு கிராமப்புறங்களில் வறியோர் நலத்திட்டங்கள் (கூடை முடைதல், மட்பாண்டம் வனைதல், பனம்பொருள் உற்பத்தி, கைவினைப் பொருட்கள் உற்பத்தி முதலியன) பலவற்றை நடைமுறைப்படுத்துமாறுகோரி சமூக சேவைகள் அமைச்சின் செயலாளருக்கு **100** சொற்களில் ஒரு **கடிதம்** எழுதுக.

**அல்லது**

போதைப் பொருள் பாவனை அதிகரிப்பின் அபாயம் குறித்த விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தும் வகையில் அமைந்த **100** சொற்கள் கொண்ட ஒரு **துண்டுப் பிரசுரம்** தயாரிக்குக.

*(15 புள்ளிகள்)*

* * *

The National e-learning Portal for The General Education

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**22 T III**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2014 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2014 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2014

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය III
தமிழ் மொழியும் இலக்கியமும் III
Tamil Language and Literature III

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

# தமிழ் மொழியும் இலக்கியமும் III

**முக்கியம் :**

* அறிவுறுத்தலுக்கேற்ப **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* **1, 2, 3, 4** ஆகிய வினாக்களுக்கும் **5, 6, 7** ஆம் வினாக்களில் ஏதாவது **ஒரு** வினாவிற்கும் விடை எழுதுக.
* இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**1.** (i) "குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்."

(அ) வடு என்பதன் பொருள் யாது ?

(ஆ) மேற்படி குறட்பாவின் பொருளைத் தெளிவுறுத்துக.

(ii) 'முத்தொள்ளாயிரம்' என்ற நூலுக்கு அப்பெயர் வந்தமைக்கான காரணத்தைத் தருக.

(iii) "காடுமாற்றி முடிந்தது. எட்டுச் செலவும் கழிந்து மறுநாள் விதானையார் வீட்டுக்குப் போயிருந்த வைரமுத்தர்..."

(அ) இப்பகுதியில் குறிப்பிடப்படும் இறுதிக் கிரியைகள் யாவை ?

(ஆ) விதானையார் என்ற உத்தியோகத்தர் தற்போது என்ன பெயரால் குறிப்பிடப்படுகின்றார் ?

(iv) "இந்தச் சுவடி தங்களிடம் இனித்திரும்பாது. இதுவே ஏழாவது காண்டமாக எனது நூலுடன் இணைந்து இருக்கப் போகிறது."

(அ) இக்கூற்று யாரால், யாருக்குக் கூறப்பட்டது ?

(ஆ) ஏழாவது காண்டமாக இணைக்கப்போவதாகக் கூறிய பகுதியின் பெயர் யாது ?

(v) "படலையைத் தாண்ட
நிமிர்ந்து விஸ்வரூபமாய்
வழி மறிக்கும் முற்றத்து வேம்பு"

(அ) விஸ்வரூபம் என்பதன் பொருள் யாது ?

(ஆ) இதில் இடம்பெற்றுள்ள இலங்கைத் தமிழ் வழக்குச் சொல் யாது ?

(vi) "குறிய நில மன்னவரும் பிரசைகள் ஒற்றுமையால் குலவி வாழ்வார்."

(அ) பிரசை என்ற வடசொல்லின் மூல வடிவம் யாது ?

(ஆ) இத்தொடர் உணர்த்தும் விடயத்துக்குப் பொருத்தமான பழமொழி யாது ?

(vii) "இப்படித் திடீரென்று ஒன்றும் ஏற்படக் காரணமே இல்லை. முந்தநாள்தானே கடுதாசி வந்தது".
கடுதாசி என்ற சொல்லுக்கு நிகராகத் தமிழில் வழங்கும் **இரு** சொற்கள் தருக.

(viii) "சந்தியாதேவி நாணத்தால் தலைகுனிந்து அடிவானத்தினின்றும் மெல்ல அடிவைத்து வான வீதியில் வந்து கொண்டிருக்கிறாள்".

(அ) சந்தியாதேவி என்று குறிப்பிடப்படுவது யாது ?

(ஆ) இதில் இடம்பெற்றுள்ள அணி யாது ?

/பக். 2 ஐப் பார்க்க

(ix) நந்தி பதம் சேரார் ஆனைக் கொம்பன்றோ நம்குடிலில்
குறுங்காலும் நெடுவளையும் குனிந்து பாரீர்.

(அ) நந்தியின் எதிரிகள் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளனர் ?

(ஆ) குடில், குறுங்கால் என்பவை எவற்றைக் குறிக்கின்றன ?

(x) "விமலனுக்கு அவன் அண்மையில் பார்த்த ஒரு நாடகம் ஞாபகம் வந்தது... அதில் அப்பா, அம்மா போல் சீலை உடுத்திருந்தார். தலையிலே சிங்கம்போல் மயிர். கையிலே ஒரு பெரிய காப்பைத் தூக்கி வைத்திருந்தார்."

(அ) **பார்வைகள்** சிறுகதையில் விமலனுடைய ஞாபகத்துக்கு வந்த நாடகத்தில் அவனது அப்பா ஏற்று நடித்த பெண்பாத்திரம் யாது ?

(ஆ) விமலன் காப்பு என்று கருதியது எதனை ? (20 புள்ளிகள்)

**2.** பின்வரும் செய்யுட் பகுதிகள், உரைநடைப் பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழிநடையில் எழுதுக. அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்துகளிலுள்ள தொடர்களின் சிறப்புகளை விளக்கி எழுதுக.

(அ) பரந்த திறலாரைப் பாசிமேல் இட்டுக்
கரந்து மறைக்கலும் ஆமோ ? - நிரந்தெழுந்து
வேயின் திரண்ட தோள் வேல்கண்ணாய்! **விண் இயங்கும்**
**ஞாயிற்றைக் கைமறைப்பார் இல்.**

(ஆ) மஞ்சுமஞ் சுங்கைப் பரராஜ சேகர மன்னன் வெற்பில்
பஞ்சுமஞ் சும்பதப் பாவைநல் லாய்படை வேள்பகழி
அஞ்சுமஞ் சுங்கய லஞ்சுமஞ் சுங்கட லஞ்சுமஞ்சும்
**நஞ்சுமஞ் சும்**வெற்றி வேலோ வுனது நயனங்களே.

(இ) சக்கரக் கோட்டத்திலே விசயதர பூபதிக்காக என் தந்தை செய்த போரில் போர்க்களம் முழுதும் கறங்கு போல் திரிந்து பகைவர் யானை **சேனையையெல்லாம் ஊதையிற்பட்ட பூளைப்பூவென்ன நூறி எறிந்து வாகை சூடியவன்** கருணாகரனேயன்றோ. அவனுடைய நடை மேகத்தின் கதிபோல இருக்கும். அவன் வரும்போது தரையிலே ஒரு தேவன் நடந்து வருவது போலிருக்கும்.

(ஈ) **மனத்தின் ஆழத்தில் பீதி அதுபாட்டிற்குப் புழுப் போலத் துடித்துக் கொண்டே இருந்தது.** மேலே மட்டும் சமாதானம். கொஞ்ச நேரத்திற்கு ஒரு தரம் அந்தத் திகில் மேல் மட்டத்துக்கு வந்து தலையெடுக்கும்; உடம்பு பதறும்; நெஞ்சு உலரும்; அடிவயிறு கலங்கும்; முகம் விகாரமடையும்; மறுபடியும் மெதுவாகச் சமாதானத்தின் பலம் அதிகமாகும். பயத்தைக் கீழே அமுக்கி விடும். (20 புள்ளிகள்)

**3.** **கவிச்சக்கரவர்த்தி** என்ற நாடகத்தில்

(அ) கம்பனுக்கும் குலோத்துங்கனுக்கும் இடையிலான நட்பு

(ஆ) கம்பன் மீதான ஒட்டக்கூத்தனின் காழ்ப்பு

(இ) கம்பனின் பெருந்தன்மை

ஆகியன புலப்படுமாற்றை விபரிக்குக.

**அல்லது**

**விடியுமா** என்ற சிறுகதையில்

(அ) கணவனது நிலைமையை அறியத் தவிக்கும் பெண்ணின் மனநிலை

(ஆ) அந்த மனநிலையை வெளிப்படுத்துவனவாய் அமைந்த சம்பவங்கள்

ஆகியன சிறப்புறச் சித்திரிக்கப்பட்டிருக்குமாற்றை விளக்குக. (15 புள்ளிகள்)

/பக். 3 ஐப் பார்க்க

**4.** 'வீறுசால் மன்னர்...'

'கச்சி ஒருகால்...'

'மருப் பூசியாக...'

எனும் பாடல்களில் மூவேந்தரது யானைப்படைகளின் சிறப்பு சித்திரிக்கப்படுமாற்றை விளக்குக.

**அல்லது**

'ஆய்மணிப் பைம்பூண்...'

'காப்படங்கென்றன்னை...'

எனும் பாடல்களில் பாண்டிய, சேர மன்னர்களின் சிறப்பும், பெண்களின் காதல் உள்ளமும் வெளிப்படுத்தப்படுமாற்றிலுள்ள சிறப்புகளை விளக்குக. (15 புள்ளிகள்)

- பின்வரும் **5, 6, 7** ஆகிய வினாக்களுள் ஏதாவது **ஒன்றைத்** தெரிவுசெய்து விடை எழுதுக.

**5.** (அ) பிரம்மனை நிந்தித்துப் பாடியதாக அமைந்த **கல்லைத்தான்...** எனும் பாடலில் **புலவனின் வறுமையும்**

(ஆ) சடையப்ப வள்ளலைப் புகழ்ந்து பாடிய **மோட்டெருமை வாவிபுக...** என்ற பாடலில் **புரவலனின் பெருமையும்** வெளிப்படுத்தப்படுமாற்றிலுள்ள சிறப்பினை விளக்குக. (10 புள்ளிகள்)

**6.** **குத்துக்கட்டை மேலேறி...** என்ற நாட்டார் பாடலில்

(அ) ஆண் பெண்ணுக்கிடையேயான காதல் உணர்வு வெளிப்படுத்தப்படுமாற்றையும்

(ஆ) மலையகத் தோட்டத் தொழில் முறைகள் விபரிக்கப்படுமாற்றினையும்

விளக்குக.

(இ) பணிய லயத்துச் சாவல்
பாசமுள்ள வெள்ளைச் சாவல்
காலு வளர்ந்த சாவல்
கண்டாலும் பேசுதில்லை.

என்ற அடிகளில் உருவக அணி கையாளப்பட்டுள்ளவாற்றின் சிறப்பினை விளக்குக. (10 புள்ளிகள்)

**7.** **கல்வியே அழியாச் செல்வம்** என்ற கட்டுரையில்

(அ) கல்விச் செல்வத்தின் அழியாச் சிறப்பு

(ஆ) அது ஆண் பெண் இருபாலாருக்கும் உரித்துடையதாதல்

(இ) அது விழுமியங்களுக்கு வழி சமைத்தல்

ஆகியன விளக்கப்படுமாற்றைத் தெளிவுறுத்துக.

(10 புள்ளிகள்)

* * *

e-thaksalawa The National e-learning Portal for The General Education